## கிறிஸ்தவம் II

**1.**

i. ''ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர் அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும்''. இவ் இறைவாக்கை கூறிய இறைவாக்கினர் யார்? இந்த இறைவாக்கு யாரின் மூலமாக நிறைவேறியது?

**இறைவாக்கினர் எசாயா**

**''இயேசு கிறிஸ்துவின் / மெசியா** (02 புள்ளிகள்)

ii. பின்வரும் இறை வெளிப்படுத்தல்கள் எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டன?

(அ) ''என் அன்பான மைந்தர் நீரே, உம் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்''

(ஆ) ''இவரே என் மைந்தர், நான் தேர்ந்துகொண்டவர் இவரே''

**(அ) இயேசுவின் திருமுழுக்கு**

**(ஆ) இயேசுவின் தோற்றம் மாறுதல் / மறுரூபமடைதல்.**

(02 புள்ளிகள்)

iii. (அ) யூத பஸ்காவின் மூலம், யூதர்கள் எந்த நிகழ்வைக் கொண்டாடுகின்றனர்?

(ஆ) ஈஸ்டர் பண்டிகையின் முக்கியத்துவம் யாது?

**(அ) எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கிடைத்த விடுதலை**
**(கடத்தலின் விழா / புளிப்பற்ற அப்ப விழா)**

**(ஆ) இயேசுவின் உயிர்ப்பின் மூலமாக பாவிகளுக்கு கிடைத்த விடுதலை**

(02 புள்ளிகள்)

iv. மரணத்தை வென்று அற்புத செயல்களை செய்து, இயேசுவானவர் புது வாழ்வு அளித்த இரண்டு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

- யவீருவின் மகனை உயிர்பித்த சம்பவம்
- நயீன் ஊர் விதவையின் மகனை உயிர்ப்பித்த சம்பவம்
- இலாசார் உயிர்பெற்ற சம்பவம் (இவற்றில் ஏதாவது இரண்டு)

(02 புள்ளிகள்)

v. இயேசுவானவரின் மரணத்தின்போது இயற்கையில் ஏற்பட்ட இரண்டு ஆச்சரியமிக்க நிகழ்வுகளை எழுதுக.

- நாடு முழுவதும் இருள் சூழ்ந்தது, சூரியன் இருளடைந்தமை
- பூமியதிர்ச்சி, கோவிலின் திரைசீலை இரண்டாகக் கிழிந்தமை

(02 புள்ளிகள்)

vi. (அ) சமுதாயத்தில் நீதியை உருவாக்குவதற்கு திருமுழுக்கு யோவான் முன்வைத்த சவால் யாது?

(ஆ) சமுதாயத்தில் நியாயத்தை நிலைநாட்டுவதற்கு ஆதித் திருச்சபை எவ்வாறு செயற்பட்டது?

**(அ) இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும். உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும். இவ்வாறு வரிதண்டுவோருக்கும் படைவீரர்களுக்கும் கொடுத்த செய்தி.**

**(ஆ) அனைத்தையும் பொதுவாக வைத்து இல்லாதவரோடு பகிர்ந்துகொள்ளுதல், ஏழு திருத்தொண்டர்களைத் தெரிவு செய்து விதவைகளைக் கவனித்து எருசலேம் பொதுச்சங்கத்தின் தீர்மானங்கள்.**

(02 புள்ளிகள்)

vii. பணியாள் தலைமைத்துவத்தின் பண்புகளை வெளிக்கொண்டு வருவதற்கென இயேசுவானவர் உபயோகித்த **இரண்டு** நிகழ்வுகளை எழுதுக.

- **சிறுவர்களை மதித்தல்**
- **வீடுகளுக்கு தேடிச் சென்று உதவிகள் செய்தல்**
- **சீடர்களின் பாதம் கழுவுதல்**
- **அனைவரின் விடுதலைக்காகத் தாழ்மையுடன் தன் வாழ்வை அர்ப்பணித்தல்**
  (இவைகளில் ஏதாவது இரண்டு)

(02 புள்ளிகள்)

viii. மன்னிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்கு இயேசுவானவர் செயற்பட்ட இரு சந்தர்ப்பங்களை தருக.

**சிலுவையில் இருக்கும் போது தன்னை சிலுவையில் அறைந்தவர்களையும் தமக்கு எதிராக செயல்பட்டவர்களையும் மன்னித்து, வேண்டினார்**

**விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பாவியான பெண்ணை மன்னித்தார், முடக்குவாதமுற்றவனை மன்னித்து குணமாக்கினார்.**
**மன்னிக்க மறுத்த பணியாள் உவமையை கூறினார்**

**ஏழ் எழுபது முறை மன்னிப்பு....**

**இறைவேண்டலில் மன்னிப்பு** (இவைகளில் ஏதாவது இரண்டு)

(02 புள்ளிகள்)

ix. ''மனிதர்களே, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்? நாங்களும் உங்களைப் போன்ற மனிதர்கள்தான்''
(அ) பவுல் இக்கூற்றை எந்த நகரில் வைத்துக் கூறினார்?
(ஆ) இதன் மூலம் கிறிஸ்தவ பணியாளர்களுக்கு பவுல் தரும் செய்தி யாது?

**(அ) லிஸ்திராவில்**
**(ஆ) புதுமைகள் செய்யும் போது தமக்கென புகழ்ச்சியை எதிர்பாராமல், தாழ்மையோடு செயற்பட்டு ஆண்டவருக்கு புகழ்ச்சியையும் மகிமையையும் அளித்தல்.**

(02 புள்ளிகள்)

x. **''மறுபடியும் பிறந்தாலன்றி** எவரும் இறையாட்சியைக் காண முடியாது''
(அ) இயேசுவானவர் இவ்வாறு கூறியது யாருக்கு?
(ஆ) தடித்த எழுத்துக்களில் தரப்பட்டுள்ள சொற்கள் வலியுறுத்தும் விடயம் யாது?

**(அ) நிக்கதேமுவுக்கு**
**(ஆ) இறையரசின் பண்புகளுக்கேற்ப ஆன்மீக புதுப்பித்தல், பாவத்திற்கு விடுதலைபெற்று புதுவாழ்வை அளித்தல்**

(02 புள்ளிகள்)

02. ''நீர் என் வீட்டிற்குள் அடி எடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை சொல்லும் என் ஊழியர் நலமடைவார்.''
(i) இவ்வார்த்தைகளைக் கூறியவர் யார்? அவர் வகித்த பதவி என்ன?
(ii) இதற்கு பின்னணியாக அமைந்த சந்தர்ப்பத்தினை சுருக்கமாக விளக்குக.
(iii) எம்மால் கடைப்பிடிக்கக் கூடிய மேற்கூறிய கூற்றை கூறியவரது விசேட நடத்தைப் பண்புகளையும் இயேசுவானவரால் வெளிப்படுத்திக் காட்டப்பட்ட குணாதிசயத்தையும் விளக்குக.

**i. நூற்றுவர் தலைவர், படைவீரர் நூறு பேருக்கு தலைமைத்துவம் வகித்த அதிகாரமுள்ள படைத்தளபதி.**

**ii. - தனது பணியாளன் நோயுற்றிருந்த வேலையில் சுகத்தைப் பெற்றுத் தருமாறு இயேசுவிடம் வேண்டிக் கொண்ட சந்தர்ப்பம்.**

- **அவன் இயேசுவில் விசுவாசம் கொண்டவன்.**
- **இயேசுவின் வல்லமையை விசுவாசித்தான். இயேசுமுன், தான் தகுதியற்றவன் என்பதை தாழ்மையோடு வெளிப்படுத்தினான்.**

**iii. - அவரின் செயற்பாட்டில் வெளிப்படும் பண்புகளாவன : தாழ்மை, கீழ்ப்படிவு, நம்பிக்கை**

- **ஆண்டவர் மீது கொண்ட நம்பிக்கையின் மூலமாக தனது பணியாளருக்காகச் செயற்பட்டார் இயேசு தனது ஆச்சரியத்தை இவ்வாறு வெளிப்படுத்ததினார்.**
- **“இஸ்ரயேலரிடத்தில் இவ்வாறான நம்பிக்கையை தான் காணவில்லை” என இயேசு பாராட்டினார்.**
- **இயேசு நூற்றுக்கதிபதியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவரின் பணியாளனை குணப்படுத்தினார்.**

( 2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**3.** பல நாடுகளிலும் ‘பெண்கள் விடுதலை முன்னணி’ காணப்படுகின்றது.

i. யூத சமுதாயத்தில் பெண்களின் நிலை எத்தகையது என்பதை எடுத்துக்காட்டக்கூடிய **இரண்டு** காரணிகளை தருக.

ii. பெண்களுக்கு சமுதாயத்தில் உரிய இடத்தைக் கொடுப்பதற்கென இயேசுவானவர் மேற்கொண்ட **மூன்று** படிமுறைகளை சுருக்கமாக எழுதுக.

iii. இலங்கை சமுதாயத்தில் பெண்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதற்கு இயேசுவின் முன்னுதாரணங்கள் படி, கிறிஸ்தவர்களால் எடுக்கக்கூடிய **ஐந்து** நடவடிக்கைகளை விளக்குக.

**i. - யூத சமுதாயத்தில் அவர்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை.**

- **எதையும் தீர்மானிக்கும் பொறுப்பு அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை.**
- **பொது இடங்களில் ஆண்களுக்கு மத்தியில் உரையாடுவது தடைசெய்யப்பட்டது.**
- **வீட்டுவேலைகளுக்கும் சிறுவர்களை பராமரிப்பதற்கும் மட்டுப்படுத்தப்பட்டது.**
- **ஆலயங்களில் அவர்களுக்கு வேறாக தனியிடம் ஒதுக்கப்பட்டது.**

**ii. - இயேசு தனது சீடர்களாக பெண்களையும் தெரிந்து கொண்டார்.**

- **மார்த்தா, மரியா சம்பவத்தில் மரியா நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் எனக் கூறி, இறையரசின் பணியில் பெண்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினார்.**
- **இரத்தப் போக்குடைய பெண் இயேசுவின் ஆடையைத் தொட்டபோது இயேசு அவளை ஒதுக்கிவைக்கவில்லை.**
- **பாவியான பெண்ணை மன்னித்து நல்வழிப்படுத்தினார்.**
- **சமாரிய பெண்ணுக்கு வழிகாட்டினார்.**

**iii. - வேலைத்தலங்களில் பெண்களுக்கு சம அந்தஸ்த்தை வழங்குதல்.**

- **குடும்பத்தில் பெண்களை சமமாக மதித்தல்.**
- **அசாதாரணங்களுக்கு உள்ளாகும் பெண்களுக்காக குரல் கொடுத்தல்.**
- **ஆண்களை போன்று பெண்களுக்கும் சம உரிமைகளை வழங்குதல்.**
- **இறையரசின் பணியில் ஈடுப்படுவதற்கு சந்தர்ப்பம் அளித்தல்.**
- **பெண் குருத்துவ பணியின் மூலமாக ஆலயகாரியங்களில் ஈடுபடுதல்.**
- **ஆண்களுக்கு நிகராக பெண்கள் பணிபுரிய வாய்ப்பளித்தல்.**

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

4. (i) பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட மனந்திரும்புதல் மாற்றத்தை நன்கு புலப்படுத்தும் சான்றுகள் யாவை?

(ii) பவுலின் வாழ்க்கைப் பின்னணியானது அவரின் இறை பணியில் எவ்வாறு உதவிற்று என்பதை **மூன்று** உதாரணங்கள் மூலம் விளக்குக.

(iii) பவுலின் வாழ்க்கை, திருப்பணி என்பவற்றின் மூலம் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்றவேண்டிய பெறுமதியான பண்புகள் எவை என்பதை விளக்குக.

i. **- தமஸ்குவில் கிறிஸ்தவர்களை துன்புறுத்த சென்ற வேளையில் இயேசுவை சந்தித்து அவரை ஆண்டவர் என ஏற்றுக்கொண்டார்.**
- **ஆரம்பத்தில் இவர் எதிர்த்து துன்புறுத்திய மக்களோடே இணைந்து செயல்பட்டார்.**
- **இயேசுவே இறைமகன் என்பதை உறுதியாக வெளிப்படுத்தினார்.**
- **கிறிஸ்துவின் இறைவார்த்தையை பரப்புவதில் முன்னின்று ஆர்வமுடன் செயற்பட்டாரா்.**

ii. **- யூதனாகவும், பரிசேயனாகவும் இருந்தார் - இதனால் தொழுகை கூடங்களில் போதிக்கும் தகுதியை பெற்றார்.**
- **உரோமைக் குடியுரிமை - உரோமைய பேரரசனின் தீர்ப்பை பெறுவதற்கு தகுதி கிடைத்தது.**
- **பிலிப்பிய சிறைச்சாலையில் இருந்து விடுதலை பெற்றமை.**
- **தர்சு நகரில் பிறந்தவர் - பல இனமக்களோடு தொடர்புகொண்டு பல மொழிகளையும், கலாச்சாரங்களையும் அறிந்துக்கொண்டார்.**
- **உயர்கல்வியை கற்றவர் - அறிஞர்களோடு தர்க்கிக்கும் ஆற்றலைப் பெற்றவர்.**
- **எதென்ஸ் - சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப அறிஞர்களுடன் உரையாடி தமது நம்பிக்கையின் நற்செய்தியை முன்வைத்தார்.**
- **கூடாரத் தொழிலைக் கற்றவர் - கொரிந்தில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவோடு இணைந்து கூடாரத்தொழிலையும் மேற்கொண்டு இறைப்பணியாற்றினார்.**

iii. **- இயேசு கிறிஸ்துவில் முழுமையான நம்பிக்கையைக் கொண்டு வாழுதல்.**
- **வாழ்வின் முற்றான மாற்றத்தினால் புதிய செயற்பாடுகளில் ஈடுபடுதல்.**
- **பயமின்றி நீதிக்காக குரல் கொடுத்தல் - பவுல் பிலிப்பில்.**
- **கடவுளுக்கு கொடுக்க வேண்டிய மகிமையை அவருக்கு கொடுத்தல் - லீஸ்திராவில் பவுல்.**
- **பன்மைச் சமுதாயத்தில் பிறரை புறக்கணிக்காமல் அவர்களை ஏற்றுக்கொள்ளுதல்.**
- **சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு ஞானத்தோடு செயற்பட்டு போதித்தல் கிறிஸ்துவை தைரியமாக அறிமுகம் செய்தல் - பவுல் எதென்சில்.**

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

5. ''இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று… இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்''.

(i) இயேசுவானவர் யாருடைய வீட்டில் மேற்கண்டவாறு கூறினார்? இவ்வாறு கூறப்பட்டதற்கு பின்னணியாக அமைந்த சந்தர்ப்பம் யாது?

(ii) இயேசுவானவர் காணாமற்போனவர்களைத் தேடுவதற்கும் மீட்பதற்கும் செயற்பட்ட **மூன்று** சந்தர்ப்பங்களைத் தருக.

(iii) வாழ்க்கையில் வழி தவறிப்போன உமது நண்பர் ஒருவரை நல்வழிப்படுத்துவதற்கு இயேசுவின் பணிகளை அடித்தளமாகக் கொண்டு, உங்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் **ஐந்தினை** விளக்குக.

i. **அ. சக்கேயுவின் வீட்டில் கூறப்பட்டது.**
**ஆ. சக்கேயு இயேசுவை பார்ப்பதற்காக மரத்தில் ஏறியிருந்த போது இயேசு: சகேயுவை அழைத்து அவருடன் உரையாடி அவரின் வீட்டிற்கு சென்ற சந்தர்ப்பத்தில், சக்கேயுவில் ஏற்பட்ட மனமாற்றம்.**

**ii.** - **வழிதவறி சென்ற சகேயுவை நல்வழிப்படுத்தினார்.**
- **பாவியான பெண்ணை மன்னித்து புதுவாழ்வளித்தார்.**
- **தொழுநோயாளியை தொட்டு குணப்படுத்தி மீண்டும் சமுதாயத்துக்குள் கொண்டு வந்தார்.**
- **கை சூம்பியவரை ஓய்வுநாளில் குணப்படுத்தி ஏற்றுக்கொண்டார்.**
- **லேவியை தனது சீடனாகத் தெரிவு செய்தார்.**

**iii.** - **போதை பொருள் பாவனை, மற்றும் தீமையான செயல்களுக்கு அடிமையானவர்களுக்கு அறிவுரைக் கூறி அவர்களை நல்வழிப்படுத்தல்.**
- **அவர்களுக்காக இறைவனிடம் மன்றாடுதல்.**
- **வகுப்பறையில் ஒதுக்கப்பட்ட மாணவர்களை ஏற்று அவர்களை சிநேகித்தல்.**
- **தமது ஆற்றல்களை பயன்படுத்தி பிறருக்கு உதவி செய்தல்.**
- **சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்து அவர்களுக்கு உதவுதல்.**
- **நண்பர்களோடு சென்று தவறான வழிகளில் செல்வோரை நல்வழிப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.**

இவ்வாறான பொருத்தமான கருத்துக்களுக்கு புள்ளி வழங்கவும்)

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

6. ‘‘நாம் வாழும் உலகம் அநீதிகள் நிறைந்தது’’

i) ‘‘நீதி வெள்ளமெனப் பொங்கிவரவும், நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வரவும்’’. இக்கூற்றைக் கூறிய இறைவாக்கினரைப் பெயரிட்டு, அவர் எதிர்பார்த்த சமுதாய மாற்றம் எத்தகையது என்பதை தருக.

(ii) இயேசுவானவர் இவ்வுலகிற்கு வந்து, சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுவதில் எவ்வாறு தலையிட்டார் என்பதனை **மூன்று** உதாரணங்கள் மூலம் தெளிவுப்படுத்துக.

(iv) நீங்கள் வாழுகின்ற சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு அநீதிகளை விளங்கிக் கொண்டு நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டுவதற்கு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதற்கான உமது முன்மொழிவுகள் **ஐந்தினை** எழுதுக.

**i.** - **ஆமோஸ் இறைவாக்கினர்**
- **அநீதி நிறைந்த வட அரசை நீதி, நேர்மை நிறைந்த சமுதாயமாக எதிர்ப்பார்த்தார்.**

**ii.** - **நோயினால் ஒதுக்கப்பட்டடோரை கருணையோடு ஏற்றுக்கொண்டு சுகமளித்தார்.**
- **புறக்கணிக்கப்பட்ட பெண்களை இறையரசின் பங்காளிகளாக்கினார்.**
- **பெண் சீடர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு சம உரிமை வழங்கினார்.**
- **சிறுவர்களுக்கு உரிய அந்தஸ்த்தை வழங்கி, இறையரசில் அவர்களை உயர்ந்தவர்களாகக் காண்பித்தார்.**

**iii.** - **தொழிற்சாலைகள், தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளிகளின் உரிமைக்காக கிறிஸ்தவ நிறுவனங்கள் மூலமாக குரல் கொடுத்தல்.**
- **அரசியல் சார்ந்த அநீதிகள் - இவற்றை மேல் அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.**
- **தொழிற்சார் நியமனங்களில் நீதி, நியாயத்தோடு செயற்படுதல்.**
- **அநீதி இழைக்கப்பட்ட ஏழை மக்களின் துன்பங்களைப் பற்றி தொடர்பு சாதனங்கள் மூலமாக வெளிப்படுத்தல்.**
- **சிறுபான்மை, பெரும்பான்மை மக்களின் வேறுப்பாடுகளின் மத்தியில் நீதியை நிலைநாட்டுவதற்காகச் செயற்படுதல்.**
- **குடும்பப் பிரச்சினைகள், அநீதிகள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தல்.**

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

7. கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளுள் **இரண்டைத்** தெரிவுசெய்து, திருமறை உதாரணங்களுடன் சிறுகுறிப்பு எழுதுக.

i) பிறரை உபசரித்தல்

(ii) பன்மைச் சமுதாயத்தில் நம்மை ஒற்றுமைக்கு அர்ப்பணிப்போம்

(iii) அன்பு பற்றிய பவுலின் போதனை

(v) துன்புறுத்தல் பற்றி இயேசு உருவாக்கிய புதிய மனப்பாங்கு

**i. பிறரை உபசரித்தல்**

- **யூத சமுதாயத்தில் இது ஒரு விஷேட பண்பாடாகும், உதாரணம்:- ஆபிரகாம், மார்த்தா மரியா வீட்டில் இயேசுவை உபசரித்தல், பவுல் சிறைக்கைதியாக மால்த்தா தீவில் அவருக்கு கிடைத்த உபசரிப்பு.**
- **கிறிஸ்தவர்களின் எதிர்ப்பார்ப்பானது நாம் அறியாத ஏழை மக்களை விஷேடமாக கவனித்து உபசரித்தல்.**
- **நாம் உபசரிக்கும் போது மீண்டும் எம்மை உபசரிக்க முடியாத ஏழைகளை அழைத்து உபசரித்தல்.**

  **விருந்திற்கு அழைக்கப்படும் போது பின்னால் அமர்ந்து தாழ்மையாய் செயற்படல்.**

**ii. பன்மைச் சமுதாயத்தில் நம்மை ஒற்றுமைக்கு அர்ப்பணிப்போம்**

- **இலங்கையராகிய நாம் பன்மைச் சூழலில் வாழ்கின்றோம். பல இன, பல சமய மக்களோடு இருக்கின்றோம். எனவே அவர்களோடு ஒற்றுமையோடு வாழ்வதற்கு செயற்படுவோம். பல இன மக்களின் விழாக்களில், பலதரப்பட்ட நிகழ்வுகளில் கலந்துக்கொண்டு எமது கிறிஸ்தவ அடையாளத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். பிற சமயங்களை புறக்கணிக்காமல் அவர்களுடன் ஒற்றுமையாக செயல்படல் வேண்டும்.**

  **உதாரணம் : பவுல் ஏதேன்ஸில் சிலைவணக்கம் போன்ற பலவிதமான தீய பழக்க வழக்கங்களை அகற்றுவதற்காக செயற்பட்டார் (இயேசு). எருசலேம் பொது சங்கத்தில் பிற இனத்தவரை சேர்த்துக் கொள்ளல். பேதுரு பிற இனத்தவரான கொர்னேலியுவின் வீட்டிற்கு செல்லுதல், இயேசு நூற்றுக்கதிபதியின் பணியாளரை சுகப்படுத்தியமை, சமாரிய நகருக்குள் சமாரிய பெண்ணிடம் உரையாடல். பவுல் கலாத்திய திருமுகத்தில் கூறிய படி (இனி உங்களிடையே யூதரென்றும், கிரேக்கரென்றும் வேறுபாடில்லை…) நாம் பன்மை சூழலில் ஒற்றுமையாக செயல்படுவோம்.**

**iii. அன்பு பற்றி பவுலின் போதனை**

- **1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் அன்பின் சிறப்புதன்மையை வெளிப்படுத்தியுள்ளார். அன்பு பொறுமையுள்ளது, இரக்கமுடையது, பொறாமைப்படாது, தற்புகழ்ச்சிக் கொள்ளாது, இறுமாப்படையாது, இழிவானதை செய்யாது, தன்னலம் நாடாது, எரிச்சலுக்கு இடங்கொடாது, தீங்கு நினையாது, தீமையில் மகிழ்வுறாது, உண்மையில் மகிழும், அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கியிருக்கும், மன உறுதியாய் இருக்கும், அன்பு ஒருபோதும் அழியாது, இத்துடன் நாம் எமது வாழ்வியல் கனிகளையும் வெளிப்படுத்துவோம்.**

**iv. துன்புறுத்தல் பற்றி இயேசு உருவாக்கிய புதிய மனப்பாங்கு**

- **துன்புறுத்தல் பாவிகளுக்கு மட்டுமல்ல, அனைவருக்கும் பொதுவானது.**
- **பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது வாழ்விலும் துன்புறுத்தல்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றது.**
- **இயேசுவைப் போன்று துன்பங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் போது, அது எம்மை புது வாழ்விற்கு அழைத்து செல்கின்றது.**
- **நீதியின் பொருட்டு துன்றுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது என்ற இயேசுவின் போதனைப்படி துன்பங்களை சகிக்கும்போது இறையரசின் அங்கத்தவர்களாவோம். இயேசு தம் வாழ்வில் துன்பங்களுக்கூடாகவே வெற்றி பெற்றார். இயேசுவை துன்புறும் பணியாளராக இறைவாக்கு வெளிப்படுத்துகின்றது. சிலுவையை சுமந்து செல்லும் அனைவரும் புதிய எதிர்ப்பார்பும், புதுவாழ்வும் கிடைக்கும்.**

  **உதாரணம் :**
- **யோபு, ஏரேமியா**
- **இயேசு தனது துன்பங்களை பயமின்றி எதிர்நோக்கினார்**
- **பவுல் மனமாற்றத்தில் அவருக்கு ஏற்பட்ட துன்பங்களை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.**

(5 + 5 = 10 புள்ளிகள் )

